குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 25–2026

அ.சா. 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. கிருஷ்ணகுமார் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.ரவி |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 42 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873–ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 05.03.2026**

**(எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது சென்னையில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரி என்னுடன் பிறந்த தம்பி ஆவார். இவ்வழக்கு விபத்தில் இறந்த ஞானசுந்தரி என்னுடைய தாயார் ஆவார். கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒருநாள் மதியம் 01.30 மணியளவில் எனது தம்பியான ஆஜர் எதிரி எனக்கு போன் செய்து தான் தனது தாயாரை இருச்சக்கர வாகனத்தில் அழைத்து சென்ற போது சூளகிரி அருகே இருச்சக்கர வாகனத்தின் டயர் வெடித்து கீழே விழுந்து விட்டதாகவும்

தனக்கு பயமாக உள்ளதாகவும் தகவல் சொன்னார். நான் சென்னையில் இருந்து கிளம்பி ஒசூர் காவேரி மருத்துவமனையில் வந்து பார்த்த போது எனது தாயார் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு இருந்தார் அதனால் என்னாள் அவரை பார்க்க முடியவில்லை. என் தாயார் இரண்டு நாட்கள் சிகிச்சையில் இருந்து இறந்துவிட்டார். இது குறித்து காவல் நிலையத்தில் தகவல் சொல்ல சென்ற போது போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெப்பம் என்னுடையது ஆகும். ஆனால் அதில் எழுதப்பட்டுள்ள விவரங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வழக்கு குறித்து வேறு எதுவும் தெரியாது. **<u>புகார் மனுவில் உள்ள என்னுடைய கையெப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>**. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி சட்டப்படி 161 குவிமுச பிரிவின் கீழ் அளித்த வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்த காரணத்தினால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

கடந்த 03.10.2025ம் தேதி இருச்சக்கர வாகனத்தில் எனது தம்பிவுடன் எனது அம்மா கோவிலுக்கு சென்றுவிட்டு மீண்டும் சூளகிரி செல்ல ஒசூர்– சூளகிரி தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டு இருந்தபோது கோபசந்திரம் வன அலுவலகம் அருகே எனது தம்பி இருச்சக்கர வாகனத்தை கவனகுறைவுடன் ஓட்டிசென்றதால் பின்சக்கரத்தில் கல் ஒன்று மோதி பின்சக்கர டயர் வெடித்து விபத்து

ஏற்பட்டதில் எனது தாயாருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டதாக புகார் மனுவில் கூறியும் தொடர்ந்து சிகிச்சை பலன் இன்றி 2 நாட்கள் கழித்து இறந்து விட்டதாகவும் விபத்து குறித்து நடவடிக்கை எடுக்குமாறும் போலிசார் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது எதிரி என் உடன் பிறந்த சகோதரர் என்பதால் அவரை இவ்வழக்கில் இருந்து காப்பாற்ற, அவருடைய செயலால் விபத்து ஏற்படவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை</u>**

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ஓசூர்.**

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 25-2026

அ.சா. 2

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. ஓம்பிரகாஷ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.முருக ரமேஷ் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 28 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 05.03.2026**

**(எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது சூளகிரியில் குடியிருந்து சூளகிரி காவல் நிலையத்தில் தகவல் பதிவு உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரி என்னுடைய அக்காவின் கணவராவர். அ.சா.1 ஆஜர் எதிரியின் சகோதரர். அவர் எனக்கு மாமா. கடந்த 03.10.2025ம் தேதியில் என்னுடைய வீட்டிற்கு உறவினராக வந்த ஆஜர் எதிரியும் அவரது தாயாரும் இருச்சக்கர வாகனத்தில் கோபசந்திரம் அருகே வரும் போது வாகனத்தின் டயர் வெடித்து ஏற்பட்ட விபத்தில் எதிரியின் தாயாருக்கு

பலத்த காயம் அடைந்ததாக ஆஜர் எதிரி எனக்கு தகவல் சொல்ல நான் காவேரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த எதிரியின் தாயாரை சென்று பார்த்தேன். பின்னர் மறுநாள் சிகிச்சை பலன் இன்றி அவர் இறந்துவிட்டார். ஒசூர் காவேரி மருத்துவமனையில் நடந்த பிரேத விசாரணையில் உடனிருந்தேன். வழக்கு குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

வழக்கு சம்பத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். வழக்கு விபத்து எப்படி நடைப்பெற்றது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இறந்துபோன ஞானசுந்தரிக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரி என்னிடம் போனில் எந்த தகவலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ஒசூர்.**

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 25–2026

அ.சா. 3

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. ராமப்பா |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.கிருஷ்ணப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 32 |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**1873–ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 05.03.2026**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தியாகரசனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து பெயிண்டர் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையெப்பம் என்னுடையதுதான். அந்த கையெழுத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். என்னுடைய தம்பியின் இருச்சக்கர வாகனம் சூளகிரி காவல் நிலையத்தில் இருந்ததால் அந்த வாகனத்தின் ஆவணங்களை போலிசார் என்னை எடுத்து வரும்படி சொன்னதால் நான் காவல் நிலையத்திற்கு சென்றிருந்த

போது போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். வழக்கை ப்ற்றி வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. **பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சிகையெப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**சாட்சி சட்டப்படி 161 குவிமுச பிரிவின் கீழ் அளித்த வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்த காரணத்தினால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

கடந்த 04.10.2025ம் தேதியில் காலை 11.30 மணிக்கு ஒசூர் – கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் கோபசந்திரம் வன அலுவலகம் முன்பு விபத்து நடந்த சம்பவயிடத்தை போலிசார் பார்வையிட்டு வரைப்படம் வரைந்து தயாரித்த பார்வை மகஜரில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்த விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.</u>**

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /–ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ஒசூர்.**

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 25–2026

அ.சா. 4

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. சக்தி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.விஸ்வநாத் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 23 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873–ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 05.03.2026**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது நல்லரலப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையெழுத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். என்னுடைய இருச்சக்கர வாகனத்தை சூளகிரி காவல் போலிசார் வேறு ஒரு வழக்கு சம்பந்தமாக நிலையத்தில் வைத்து இருந்ததால் அந்த வாகனத்தின் ஆவணங்களை போலிசார் என்னை எடுத்து வரும்படி

சொன்னதால் நானும் எனது அண்ணன் அ.சா.3 உடன் காவல் நிலையத்திற்கு சென்றிருந்த போது போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். வழக்கை பற்றி வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. **பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**சாட்சி சட்டப்படி 161 குவிமுச பிரிவின் கீழ் அளித்த வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்த காரணத்தினால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

கடந்த 04.10.2025ம் தேதியில் காலை 11.30 மணிக்கு ஓசூர் – கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் கோபசந்திரம் வன அலுவலகம் முன்பு விபத்து நடந்த சம்பவயிடத்தை போலிசார் பார்வையிட்டு வரைப்படம் வரைந்து தயாரித்த பார்வை மகஜரில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்த விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.</u>**

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஒம். /–ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ஓசூர்.**